## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண் : 29

# அறிவிப்புகள்

2023-2024


## கா. ராமச்சந்திரன்

சுற்றுலாத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023






செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு.

– அய்யன் திருவள்ளுவர்

# சுற்றுலாத் துறை

## அறிவிப்புகள்

## 2023-2024

1. **இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தனுஷ்கோடி பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் வங்கக்கடலும், இந்திய பெருங்கடலும் கூடும் இடமாகிய தனுஷ்கோடி பகுதிக்கு அதிகளவில் செல்கின்றனர். இங்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பாரம்பரிய கட்டடங்களை புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல், அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு, பார்வையாளர் மாடம், நுழைவு வளாகம், வாகன நிறுத்துமிடம், நடைபாதை, இருக்கைகள் மற்றும் வழிகாட்டிப் பலகைகள், சூரிய ஒளிசக்தி மின்விளக்கு வசதிகள் ஆகிய பல்வேறு வசதிகள் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**Dhanushkodi at Ramanathapuram District will be developed with various tourist amenities at a cost of Rs. 5 crores.**



**2. ஏற்காடு நிலச்சீரமைப்பு, காட்சிமுனை, உள்கட்டமைப்பு மற்றும் பிற சுற்றுலா வசதிகளுடன் ரூ. 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஏற்காடு, சேர்வராயன் மலைத் தொடரில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் சுற்றுலாவை மேம்படுத்த, ஏற்காட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களான எமரால்டு ஏரிப்பகுதி மேம்பாடு, பார்வையாளர் மாடம், ஒலி-ஒளிக் காட்சி, நடைபாதைகள், பறவைகளை காண்பதற்கான காட்சிமுனைகள், நிலச்சீரமைப்பு, பொழுதுபோக்கு அம்சங்கள் போன்ற பணிகள் ரூ. 10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**Yercaud will be developed with aesthetic landscaping, View points, lake front, street scaping and tourist amenities at a cost of Rs. 10 crores.**



**3. மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கலாச்சார பாரம்பரிய நகரான தரங்கம்பாடியில், பல்வேறு சுற்றுலா வசதிகள் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

டேனிஷ் வர்த்தக நிலையமாக விளங்கிய தரங்கம்பாடி ஒரு கடற்கரை நகரமாகும். இங்கு அமைந்துள்ள டேனிஷ்கோட்டை1620-ஆம் ஆண்டு டேனிஷ் கட்டடக்கலை அம்சங்களைக் கொண்டு கட்டப்பட்டது. டேனிஷ் கலாச்சார பாரம்பரிய நகரான தரங்கம்பாடியில் டேனிஷ் கோட்டை வளாகம் மற்றும் பழமையான கட்டடங்களின் மேம்பாடு, அடிப்படை வசதிகள், நடைபாதை மற்றும் மிதிவண்டி பாதை, கடற்கரைப் பகுதி மேம்பாடு, வாகன நிறுத்துமிடம், வழிகாட்டிப் பலகைகள் போன்ற சுற்றுலா அடிப்படை வசதிகள் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**Tharangambadi in Mayiladuthurai District will be developed as a heritage town, by providing necessary tourist amenities at a cost of Rs. 3 crores.**



4. **தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு புதிய காட்சிமுனைகள் அமைத்தல் மற்றும் தற்போதைய காட்சிமுனைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாட்டில் இயற்கை அழகினை கண்டுகளிக்கவும், இனிமையான சுற்றுலா நினைவுகளை பெறுவதற்கும் பல்வேறு இடங்களில் காட்சிமுனைகள் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு சுற்றுலாத் தலங்களில் காட்சிமுனை வசதிகள் ஏற்படுத்தும் வகையில் புதிய தலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஏற்கனவே அமைக்கப்பட்ட காட்சிமுனைகளை மேம்படுத்தவும், புதிய காட்சிமுனைகள் உருவாக்கவும், அவ்விடங்களில் வாகன நிறுத்துமிடம், பார்வையாளர் மாடம், அமரும் இருக்கைகள், நிழற்குடைகள், தகவல் பலகைகள் மற்றும் அடிப்படை வசதிகள் ரூ.10 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**New viewpoints will be setup and existing viewpoints will be upgraded across important destinations in Tamil Nadu at a total cost of Rs. 10 crores.**



**5. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய பழங்கால சமணத் தலங்களில் ஒன்றான சித்தன்னவாசல், ரூ. 4 கோடி செலவில் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.**

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள சித்தன்னவாசல் தனிச்சிறப்பு மிக்க குடைவரை ஓவியங்கள் மற்றும் குகை ஓவியங்களுக்கு புகழ்பெற்றதாகும். ஒரே பாறையில் செதுக்கப்பட்ட சமணர் கோயில், அற்புதமான சுவரோவியங்கள், 17 சமணர் படுகைகள் சித்தன்னவாசலில் உள்ளன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் வகையில், இங்கு அடிப்படை வசதிகள், நிலச்சீரமைப்பு, நடைபாதை, சமண கலைக்கூடம், வழிகாட்டிப் பலகைகள், வாகன நிறுத்துமிடம் போன்ற சுற்றுலா அடிப்படை வசதிகள் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**Sittanavasal, one of the important ancient Jain Centers in Tamil Nadu will be developed as a tourist attraction with various amenities, at a cost of Rs. 4 crores.**



6. **கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாத்தூர் தொட்டிப் பாலம் பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

மாத்தூர் பகுதியில் உள்ள கணியான்பாறை என்ற மலையையும், கூட்டுவாயுப்பாறை என்ற மலையையும் இணைக்கும் வகையில் தண்ணீரைக் கொண்டு செல்வதற்காக தெற்காசியாவிலேயே மிக உயரமான மாத்தூர் தொட்டிப்பாலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தும் வகையில், காட்சிமுனை, அடிப்படை வசதிகள், நிலச்சீரமைப்பு, மின்விளக்கு வசதிகள், திடக்கழிவு மேலாண்மை, பூங்கா மேம்படுத்துதல் போன்ற பணிகள் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**Mathoor Aqueduct in Kanniyakumari District will be developed with various tourist amenities at a cost of Rs. 3 crores.**



**7. இந்து சமய அறநிலையத்துறையுடன் இணைந்து தமிழ்நாட்டின் முக்கிய கோயில்களில் வழிகாட்டிச் சுற்றுலாக்கள் (Guided Tours) நடத்தப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள மதுரை மீனாட்சியம்மன் கோயில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், திருவரங்கம் ரெங்கநாதர் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில், கன்னியாகுமரி சுசீந்திரம் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் ஆகிய பிரசித்தி பெற்ற கோயில்களின் வரலாறு மற்றும் கோயில்களின் உட்புறத்தில் சிறப்புமிக்க முக்கிய இடங்கள் குறித்த வரலாற்று தகவல்களை சுற்றுலாப் பயணிகளுக்கு விளக்கும் வகையிலும், சிறந்த பயண அனுபவங்களை வழங்கும் வகையிலும், பயிற்சி பெற்ற சுற்றுலா வழிகாட்டிகள் வாயிலாக, இந்து சமய அறநிலையத் துறையுடன் இணைந்து வழிகாட்டிச் சுற்றுலாக்கள்(Guided Tour) தொடங்கப்படும்.

**Guided Tours will be organized in major temples of Tamil Nadu in association with the Hindu Religious Charitable Endowments Department.**



**8. தமிழ்நாட்டில் மருத்துவ மற்றும் ஆரோக்கியச்சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து ஆண்டுதோறும் சர்வதேச மருத்துவச் சுற்றுலா மாநாடு சென்னையில் நடத்தப்படும்.**

தமிழ்நாட்டில் வேகமாக வளர்ந்துவரும் சுற்றுலாப் பிரிவில் மருத்துவ சுற்றுலாவும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் அமைந்துள்ள பல்நோக்கு மற்றும் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனைகள், மருத்துவ சுற்றுலாவிற்கான தலமாக வளர்வதற்கு மிகப்பெரிய ஆற்றலைக் கொண்டுள்ளன. மருத்துவச் சுற்றுலாவிற்கான சிறந்த தலமாக தமிழ்நாட்டினை அடையாளப்படுத்த மருத்துவத் துறையில் தொழில் முனைவோர்களுடன் இணைந்து சர்வதேச மருத்துவச் சுற்றுலா மாநாடு சென்னையில் நடத்தப்படும். இம்மாநாடு உடல்நலம் பேணும் வல்லுநர்களை ஒருங்கிணைக்கும் வகையில் கண்காட்சி அரங்கங்கள், கலந்துரையாடல் மற்றும் கருத்தரங்கம் நடத்தவும் ஒரு சிறந்த தளமாக அமையும்.

**To promote medical and wellness tourism, annual Tamil Nadu Medical Value Travel Summit will be conducted in Chennai in collaboration with various stakeholders.**



**9. யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னமான அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரம் கோயில் நுழைவு வளாகம், வாகன நிறுத்துமிடம், வழிகாட்டுப் பலகை, மின் வாகனங்கள் மற்றும் பிற வசதிகள் ரூ. 5 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.**

யுனெஸ்கோ உலகப் பாரம்பரியச் சின்னமான அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வருகைபுரியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்தும் வகையில், நுழைவு வளாகம், வாகன நிறுத்துமிடம், வழிகாட்டுப் பலகைகள், மின் வாகனங்கள் வாங்குதல் மற்றும் பிற வசதிகள் ரூ. 5 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**Gangaikonda Cholapuram Temple in Ariyalur District, an UNESCO world heritage site will be developed with various tourist amenities like Entry plaza, parking, Signages, E-vehicles and other facilities at a cost of Rs. 5 crores.**



**10. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணிமுத்தாறு அணை சாகசச் சுற்றுலா வசதிகள், பல்லுயிர் பூங்கா மற்றும் இதர வசதிகளுடன் சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக ரூ. 5 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.**

திருநெல்வேலி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலையில் களக்காடு பகுதியில் மணிமுத்தாறு அணையை பார்வையிடுவதற்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, சாகசச் சுற்றுலா, பல்லுயிர் பூங்கா மற்றும் இதர வசதிகளுடன் சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக மணிமுத்தாறு அணை ரூ. 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**Manimutharu Dam in Tirunelveli District will be developed as an Eco- tourism destination with adventure tourism activities, Bio-diversity Park and other amenities at a cost of Rs. 5 crores.**



**11. நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டல ஏரிப் பகுதியில், பார்வையாளர் மாடம், நடைபாதைகள், இருக்கைகள், மின்விளக்குகள் அமைத்தல் போன்ற பல்வேறு வசதிகள் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

1824-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உதகை ஏரிக்கு, வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இயற்கை அழகினைக் கண்டு ரசிக்கும் வகையில் பார்வையாளர் மாடம், நடைபாதைகள் மற்றும் இருக்கைகள், ஏரியின் அழகினை இரவிலும் கண்டு ரசிக்க மின்விளக்குகள் அமைத்தல் போன்ற பல்வேறு வசதிகள் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**Udhagamandalam Lake waterfront in Nilgiri District will be upgraded with various amenities such as viewing decks, walkways, benches, installation of lights and other facilities at a cost of Rs. 5 crores.**



12. **முட்டுக்காடு பகுதியில் அமைந்துள்ள 30 ஏக்கர் தீவுப் பகுதியை, கடற்கரைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் வகையில் சாகச விளையாட்டுகள், நடைபாதைகள், பறவைகளை பார்வையிடுவதற்கு மாடம் மற்றும் இதர வசதிகள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

செங்கல்பட்டு மாவட்டம், முட்டுகாட்டில் பக்கிங்ஹாம் கால்வாய் கடலுடன் இணையும் பகுதியில் அமைந்துள்ள 30 ஏக்கர் பரப்பிலான தீவுப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் படகு மூலம் செல்லவும், இத்தலத்தினை கடற்கரைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் வகையில் சாகச விளையாட்டுகள், நடைபாதைகள், பறவைகளை பார்வையிடுவதற்கு மாடம் மற்றும் இதர வசதிகள் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**TTDC will develop the 30-acre island area located at Muttukadu as a coastal tourism destination with various entertainment activities like Adventure sports, board walks, Bird watching decks and other amenities at a cost of Rs. 5 crores.**



13. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள அரித்ரா நதி கோயில் குளம், படகு இல்லம் மற்றும் பிற வசதிகளுடன் சுற்றுலாத் தலமாக ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

இந்தியாவில் உள்ள கோயில் தெப்பக்குளங்களில் பெரிய தெப்பக்குளமாகக் கருதப்படும் மன்னார்குடி, அரித்ரா நதி கோயில் தெப்பக்குளத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் படகில் பயணித்தவண்ணம் கோயிலின் அழகினை ரசிக்கும் வகையிலும், சுற்றுலாப் பயணிகளுக்கு இனிமையான அனுபவங்களை வழங்கும் வகையிலும் அரித்ரா நதி தெப்பக்குளத்தில் அடிப்படை வசதிகளுடன் படகு இல்லம் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

Haridhranadhi Temple tank in Mannarkudi, Thiruvaruar District will be developed as a tourist destination with attractions like Boating and other amenities at a cost of Rs. 50 lakhs.



**14. ஈரோடு மாவட்டம், அந்தியூர் பெரிய ஏரி படகு இல்லம் மற்றும் பிற வசதிகளுடன் சுற்றுலாத் தலமாக ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பெரிய ஏரிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் படகில் பயணித்த வண்ணம் இயற்கை அழகினை ரசிக்க, இனிமையான அனுபவங்களை வழங்கும் வகையில் இங்கு வருகை புரியும்சுற்றுலாப்பயணிகளுக்கு அடிப்படை வசதிகளுடன் படகு இல்லம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

**Anthiyur Periya Lake in Erode District will be developed as a tourist destination with a boat house and other infrastructure amenities at a cost of Rs. 50 lakhs.**



**15. செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மாமல்லபுரம் கடற்கரை ஓய்வு வளாகத்தில் MICE சுற்றுலாவை மேம்படுத்தும் விதமாக ரூ. 20 கோடி மதிப்பீட்டில் அதிநவீன மாநாட்டு அரங்கம் (Convention Centre) கட்டப்படும்.**

யுனெஸ்கோ பாரம்பரிய நினைவுச் சின்னங்களில் ஒன்றான மாமல்லபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை ஓய்வு வளாகத்தில் (TTDC Beach Resort Complex, Mamallpuram) MICE சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள், மாநாடுகள், வர்த்தகக் கண்காட்சிகள் நடத்திடும் வகையில் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய அதிநவீன மாநாட்டு அரங்கம் (Convention Centre) ரூ. 20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**To promote ECR as a MICE destination, a state-of-the-art convention centre will be constructed at TTDC Beach Resort Complex, Mamallapuram at a cost of Rs. 20 crores.**



16. **மதுரையில் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு அலகு 2-இல் கூடுதல் விருந்து மண்டபங்கள் (Banquet Halls) ரூ. 7 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க மதுரை மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள ஓட்டல் தமிழ்நாடு அலகு 2-ற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும், கூடுதல் வருவாய் ஈட்டும் நோக்கோடும் நவீன வசதிகளுடன் கூடிய நிகழ்விடங்கள், உணவறைகள், சமையலறை மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் கட்டடம் ரூ. 7 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**A new Block will be constructed at Hotel Tamil Nadu, Unit-2 at Madurai with Banquet Halls, Modern Kitchen, Dining Halls and other infrastructure facilities at an estimated cost of Rs. 7 crores.**



**17. இராமேஸ்வரத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டில் ரூ. 7 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.**

இராமேஸ்வரத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்தும் வகையில் வரவேற்பு அறை, விருந்தினர் அறைகள் மற்றும் நவீன வசதிகள் ரூ.7 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**A new hotel block will be constructed at Hotel Tamil Nadu, Rameswaram with necessary infrastructure and modern amenities at an estimated cost of Rs. 7 crores.**



**18. திருப்பதி சுற்றுலா மற்றும் பிற சுற்றுலாக்களை இயக்குவதற்கு ஏற்படும் கூடுதல் தேவைகளை பூர்த்தி செய்ய ரூ. 2.80 கோடி செலவில் 43 இருக்கைகளுடன் கூடிய இரண்டு குளிர்சாதன Volvo பேருந்துகள் வாங்கப்படும்.**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் சென்னையிலிருந்து இயக்கப்பட்டு வரும் ஒரு நாள் திருப்பதி சுற்றுலா மற்றும் பிற சுற்றுலாக்களை இயக்குவதற்கு ஏற்படும் கூடுதல் தேவைகளை பூர்த்தி செய்ய 43 இருக்கைகளுடன் கூடிய இரண்டு புதிய குளிர்சாதன Volvo பேருந்துகள் ரூ. 2.80 கோடி செலவில் வாங்கப்படும்.

**TTDC will purchase two 43 seater Volvo A/c buses at a cost of Rs. 2.80 crores to cater to the additional demand generated through Tirupathi tours and other package tours.**



**19. ஏற்காட்டில் உள்ள எமரால்டு ஏரியில் 3D projection mapping தொழில்நுட்பத்துடன் கூடிய நீர் சார்ந்த ஒலி, ஒளி காட்சி பொது-தனியார் பங்களிப்பில் (PPP) அமைக்கப்படும்.**

கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் உள்ள சேர்வராயன் மலைத்தொடரில் கோடை வாசஸ்தலமான ஏற்காடு அமைந்துள்ளது. இங்குள்ள எமரால்டு ஏரிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய சுற்றுலா அனுபவங்களை வழங்கும் வகையில் 3D projection mapping தொழில்நுட்பத்துடன் கூடிய நீர் சார்ந்த ஒலி, ஒளிக் காட்சி பொது-தனியார் பங்களிப்பில் (PPP) அமைக்கப்படும்.

**Water based sound and light show with 3D projection mapping technology will be setup in Emerald lake, Yercaud through Public-Private Partnership (PPP) mode.**



**20. நீலகிரி மாவட்டம் தேவாலா பகுதி, தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து சாகச விளையாட்டுகள், பார்வையாளர் மாடம் மற்றும் மலர் பூங்கா போன்ற பல்வேறு வசதிகளுடன் கூடிய சுற்றுலாத் தலமாக ரூ. 3 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.**

உதகமண்டலத்தின் கூடலூர் பகுதியின் இயற்கை அழகினை கண்டு ரசிக்கவும், புதிய பயண அனுபவங்களை சுற்றுலாப் பயணிகள் பெறும் வகையிலும் தேவாலா பகுதி, சாகச விளையாட்டுகள், பார்வையாளர் மாடம் (viewing deck) மற்றும் மலர் பூங்கா போன்ற பல்வேறு வசதிகளுடன் கூடிய சுற்றுலாத் தலமாக தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து ரூ. 3 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

**Devala in Nilgiri District will be developed as a tourist destination with various attractions like adventure sports, Viewing decks and flower garden in association with Horticulture Department at a cost of Rs. 3 crores.**



**21. ஏற்காடு, கொடைக்கானல், ஊட்டி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள படகு இல்லங்களில் மிதவை உணவகங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு ரூ.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.**

முட்டுக்காடு படகு இல்லத்தில் பொது-தனியார் பங்களிப்புடன் மிதக்கும் உணவகம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்காடு, கொடைக்கானல், ஊட்டி, கோயம்புத்தூர் - வாலாங்குளம் ஆகிய படகு குழாம்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு தனித்துவமான அனுபவத்தை வழங்கும் வகையில் மிதவை உணவகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு ரூ.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**Feasibility study will be conducted to establish floating restaurants at lakes in Yercaud, Kodaikanal, Ooty and Coimbatore at a cost of Rs. 15 lakhs.**



**22. கன்னியாகுமரியை சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை ரூ. 1 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.**

இந்தியாவின் தென்கோடியில் முக்கடல் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரியில் இயற்கை எழில் கொஞ்சும் அருவிகள், நிலப்பரப்புகள், சூரிய உதயம் மற்றும் அஸ்தமனத்தை பார்வையிடல், கடலின் நடுவே திருவள்ளுவருக்கு அமைக்கப்பட்ட 133 அடி சிலை, காந்தி மண்டபம், விவேகானந்தர் நினைவு மண்டபம், திற்பரப்பு அருவி, மாத்தூர் தொட்டிப்பாலம் மற்றும் பல்வேறு சிறப்பு வாய்ந்த சுற்றுலாத் தலங்கள் அமைந்துள்ளன. இங்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் தங்கும் கால அளவினை அதிகரிக்கும் வகையில் சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை ரூ.1 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

**A detailed Project report will be prepared to develop Kanniyakumari as an Eco-tourism destination at a cost of Rs. 1 crore.**

## கா. ராமச்சந்திரன்

**சுற்றுலாத் துறை அமைச்சர்**

